# தென்றல் காற்றின் இனிமை

***மதுரை எம்.பி.என். சேதுராமன்*** *நாதஸ்வர வித்வான்*

நாதசுவரம் வாசிப்பதிலே இரண்டு வழிகள் உண்டு. ஒன்று ஜனரஞ்சகமான நேர் வழி, மற்றொன்று, கரடு முரடான விவகாரமான வழி.

மதுரை திரு. பொன்னுச்சாமிபிள்ளை அவர்கள் திருவாடுதுறை திரு. டி.என். ராஜ ரெத்தினம் பிள்ளை அவர்கள் திருவிடைமருதூரார், குழிக்கரையார் போன்றவர்கள் நேர்வழி. செம்பன்னார் கோவில் சகோதரர்களான திருவாளர்கள் ராமசாமிபிள்ளை, கோவிந்தசாமி பிள்ளை, தெட்சணாமூர்த்தி பிள்ளை, சிதம்பரம் திரு. வைத்தியனாத பிள்ளை, திருமெஞ்ஞானம் திரு. டி.பி. நடராஜசுந்தரம் பிள்ளை, போன்றவர்கள் கரடுமுரடான விவகார மான வழி, இதை இரண்டையும் தவிர்த்து தனக்கென்று தென்றல்காற்று போன்ற ஒருவழியை, அமைத்துக் கொண்டவர்தான் திருவெண்காடு நாதசுர ராஜா டாக்டர் டி.பி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் காரணம், நேரான வழியிலே சென்றாலும், கரடுமுரடான வழியிலே சென்றாலும், அவர்கள் நாபிக்கமலத்திலேயிருந்து கொடுக்கும் காற்றினாலே உடம்பை வருத்துக் கொள்ளவேண்டி வரும்.

டி.பி.எஸ். அவர்கள் அப்படி அல்ல. உடம்பை ஆடாமல், அசையாமல், தன் உதட்டளவிலேயே வாசித்து மக்களை மெய்மறக்கச் செய்தவர்கள் என்பது மறக்க முடியாத உண்மை.



# திருவெண்காடு சுப்பிரமணியப் பிள்ளை

***புலவர் என். தியாகராசன்,*** பூம்புகார்

திருவலம்புரம் மூவர் பாடல்பெற்ற திருத்தலம். இங்கு எழுந்தருளி இருக்கும் பிட்சாடனர்' அப்பரின் அருட்பாடலுக்கு ஏற்றபடி சிற்பியால் யாழ் மீட்டி வரும் திருக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முனிகனங்கள் புடை சூழத் தெறித்த தொரு வீணையராய்ச் செல்வர். 'வட்டணைகள் படநடந்து மாயம் பேசி வலம்புரமேவுக்கு அங்கே மன்னினாரே' என்பது அப்பர் வாக்கு. வீணை ஏந்தி, இசையால் மயங்கச் செய்து முனிவர்களின் ஆணவத்தைப் பிச்சையாக ஏற்றார் என்பது செய்தி. இறைவன் இசைமய மானவன் என்பதை அறிவூட்டிய நிகழ்ச்சிதான் இந்த திருக் கோலத்தின் தத்துவம். இந்த திருக்கோயி லின் எதிர் வீதியில் இந்த புண்ணிய மண்ணில்தான் சுந்தரம்பாள் என்ற அம்மையார் பிறந்தார். காவிரியின் தென் கரையில் அமைந்த திருக்கோயில்.

திருவெண்காடு மூவர் பாடலும் பெற்ற பழம்பெரும் திருத்தலமாகும். முத்தமிழ் போல் இங்கு மூன்று குளம், மூன்று தலவிருஷம், மூன்று தெய்வ உருவங்கள் என்று அமைந்த சிறப்புடையது. ஆதி சிதம்பரம் எனப்போற்றப்படுவது. இங்குள்ள இறைவன் கண்காட்டும் நுதலானாய், பெண் காட்டும் உருவினனாய், கனல்காட்டு கையனாய் விளங்கு பவன். இவன் "பண்ணைப்படிக்கட்டும் இசை மயமானவனும் பயிரை வளர்த்துக்காட்டும் மேகமானவனும் ஆகியவன் என்றார் அப்பர். எனவே இந்த மானவன் என்பது அப்பர் வாக்கு. அப்படிப்பட்ட தெய்வீக மண்ணில் பிறந்த பரமநாதப் பிள்ளைக்கும், திருவலம்புரம் தந்த சுந்தரம்பாளுக்கும் பிறந்த குழந்தைதான் சுப்பிரமணியன்.

எனவே பிறப்பிலேயே இசைஞானம் திருவருவருளால் கிடைக்கப் பெற்ற குழந்தைக்கு இயற்கையாக அமைந்த கலைஞானமும் தெய்வீக ஞானமாகப் பரிணமித்த வரலாற்றின் ரகசியம் இப்போது புரியும். கலைமலிந்த பூம்புகாரின் பகுதியில் அமைந்த ஊர்களே இவை இரண்டும் ஆகும்.

இவர் மிகச் சிறிய வயதிலேயே குருகுல கல்வியாக் இவர் சித்தப்பா சாமித்துரைப் பிள்ளையிடம் நாகசுரம் கற்றுக்கொண் டார். தனது ஏழாவது வயதிலேயே நாகசுரம் வாசிப்பதில் வல்லவரானார் என்பது வரலாற்றுச் செய்தியாகும். வழிவழி வந்த இசை மரபும், தாம் பெற்ற கற்பன்ன வளமும் லயஞானச் சிறப்பும் ஸ்வர சுத்தமான வாசிப்பும் நிறைந்த இவரது பயிற்சி புகழுக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

இவர் குழலைக் கையாண்ட விதமே வித்தியாசமானது. 2 கட்டை சுதியில் ஆரம்பித்து முடிவில் 1 கட்டை சுதி அளவுக்குக் குறைத்துக் கொண்டு, தம்பூரா சுதியுடனும், வயலின், மிருதங்கம் இவற்றின ஓசை நயத்திற்கு ஏற்பவும் செம்மைப்படுத்தி நாதத்தையும் மென்மையுடையதாக்கி புதிய

புதிய புதிய உத்தியைக் கையாளும் வகையில் அடித்தளம் அமைத்துக்கொடுத் தவர் இவரென்றால் மிகையாகாது.

தெய்வங்கள் உலாவரும்போது அந்தந்த தெய்வத்திற்கு ஏற்ற வகையில் பண்களை நெறிப்படுத்தி வாசிப்பதில் புதியமரபை உண்டாக்கியவர். திருவெண்காட்டில் நான்கு திருவீதிகளிலும் சுவாமி வலம் வரும் காலத்து வாசிக்க வேண்டிய ராகங் களை முறைப்படுத்தியுள்ளது குறிப்பிடத் தக்கது. அகோரமூர்த்தி புறப்பாட்டில் 'மோகனம்' மட்டுமே வாசிப்பார். அந்த ராகம் விஸ்தாரமாக நீண்ட நேரம் வாசிக்க இயலாத நிலையிலும் தன் கற்பனை வளத்தால் பல நிலையில் விந்நியாசப் படுத்தி வாசிப்பதில் கைதேர்ந்தவர் என்பதை இசை விற்பன்னர்கள், தாளவாத்தியக் கலைஞர்கள் கூறக் கேட்டு வியந்தவன் நான். திருவெண்காட்டில் இந்திரமகோற்சவத்தில் பத்து நாட்களும் இவர் நாதத்தாலேயே உபாசனை செய்து வந்த செய்தியை உடன் வாசித்த கலைஞர் கூறக் கேட்டுள்ளேன். அகோர மூர்த்தி வீதி உலாவில் மோகன ராகத்தை அனுபவித்து மிக விஸ்தாரமாக வாசிப்பார். அவர் மனம் ஒன்றி வாசிக்கும் நேரம் இந்த உலாவரும் நேரமாகும் என்பது மக்கள் விடியவிடிய நின்று கேட்கும் நிலையே சான்றாகும்.

திருவெண்காட்டார் என்றால் அது டி.பி.எஸ்.ஐதான் குறிக்கும். அவர் எல்லாப் பண்களையுமே சிறப்பாக வாசிப்பார். பொதுமக்கள் பலராலும் விரும்பி கேட்கப் பட்ட 'மக்கள் இசை' என்று சொல்லத்தக்க வகையில் அமைந்ததும் 'மகுடி' என்று பாமர மக்களாலும் பேசப்பட்ட ராகம் புன்னகவராளி ஆகும். இந்த பண்ணை அவர் கையாண்ட விதமே தனித்தன்மை வாய்ந்தது. இந்த ராகத்தை தமக்கே உரிய பாணியில் மென்மையாக (Melodies) வாசித்து கிராமிய மணம் கமழச் செய்தவர். பாம்பு பிடாரர் தன் இசைக் கருவியில் வெளிப்படுத்தும் நாதத்தைக் கூட தன் கருவியில் வெளிப்படுத்தி இந்த கிராமிய இசைக்கும் ஒரு தெய்வீகத்தன்மையை ஊட்டியவர் இவர். அதை மிக நளினமாக மெல்லிய ஓசையில் அவரின் மென்மை யான விரலசைவில் நாட்டிய மாடச் செய்வார். கேட்போர் மெய்சிலிர்த்து நிற்பர். இது சாதாரண மக்களுக்கும் இசை நெகிழ்ச்சி ஏற்படுத்தியது. இவர் கச்சேரி என்றால் முடிவு வரை இருப்பார்கள். 'மகுடி' வாசிப்பதைக் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் காத்திருக்கும். அந்த அளவு பிரசித்தி பெற்ற பண்ணாகும்.

இவர் கச்சேரிகளில் மெய்சிலிர்க்க வைத்த பண்களாகச் சிலவற்றைக் குறிப் பிடலாம். சங்கராபரணம், கல்யாணி, மோகனம், தர்பார், தோடி, சிம்மேந்திரமத்திமம், சண்முகப்பிரியா போன்ற ராகங்கள் மக்களால் பெரிதும் விரும்பிக் கேட்டதாகும். கச்சேரி செய்யும்போது இசையோடு ஒன்றிப் போகும் இயல்புடையவர். அவர் தன்னை மறந்து வாசிப்பார் என்பார்கள். இசையோடு இசையாய் ஒன்றிப்போய் வாசிப்பதைக் கண்டு உடன் வாசித்தக் கலைஞர்கள் செயலற்று ஈடுகொடுக்க இயலாத நிலையில் மெய்சிலிர்த்து இருப்பார்களாம். அந்த அளவில் இசையோடு ஒன்றிப்போகும் இறையனு பவம் அவருக்கே சொந்தமான ஒன்றாக எண்ணத் தோன்றுகிறது.

டி.பி.எஸ்.ஐ ஒருமுறை தங்களுக்குப் பிடித்த ராகம் எது என்று கேட்டேன். சிரித்தமுகத்தோடு சட்டென்று சண்முகப் பிரியா என்றார். அவர் மனம் கவர்ந்த ராகம் சண்முகப்பிரியா. மக்கள் மனம் கவர்ந்த ராகம் 'மகுடி' என்று மக்களால்

வழங்கப்பட்ட புன்னகவராளி ராகம். 20-ம் நூற்றாண்டில் தொடக்கத்தில தலை சிறந்த நாகசுர விற்பன்னர்களில் ஒருசிலரில நாதசுர ராஜா திருவெண்காடு சுப்பிர மணிய பிள்ளை குறிப்பிடத்தக்கவராவார்.

கருங்கொடிப் புருவமேடு கயனெருங் கண்ணுமாடா
வருங்கடி மிடறும் விம்மா அணிமணியெயிறு தோன்றா
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினாளோ
நரம்பொடு வீணைநாவி நவின்ற தோவென்று நைந்தார் -

என்பது சிந்தாமணி காப்பியத்தில் திருத்தக்க தேவர் காந்தருவத்தை யாழ் மீட்டிப் பாடியதைச் சுட்டிக்காட்டி யுள்ளார். இந்தக் காட்சியை திருவெண்காட்டாரிடம் நேரில் கண்டு மகிழ்ந்தவன் நான். 'இசை மழை' என்ற நூலும் 'கண்ணிமையா கண்டந்துடியா கொடிறசையா பண்ணவும் வாய் தோன்றா பற்றெரியா' என்று குறிப்பிடும் இந்த இலக்கண முறைப்படி திருவெண்காட்டார் விளங்கினார் எனக்கூறலாம். பாடும்போது பாடகர்கள் பலர் செய்யும் சேட்டை களைப் பார்த்திருக்கலாம். நாகசுரக் கலைஞர்கள் வாசிக்கும்போது கன்னத்தில் இருபுறம் புடைப்பும், கழுத்து நரம்புகள் புடைப்பும், காற்றை அடக்கிவிடும்போது பெருமூச்சும் வரும். ஆனால், திவெண்காட் டாரிடம் புடைப்புத் தோன்றா; மிடறும்விம்மா. உதடு மட்டும் அசையும். அந்த அசைவில் அவர் விரல் குழலில் நடம் பயிலும். பாரதிதாசன் பூத்தொடுக்கும் நங்கையின் விரல் அசைவைக் கண்டு ''விரல் அசைவில் நாட்டியத்தைச் செய்கின்றாள்'' என்பது போல இவர் விரல் அசைவில் இசையை நடம் பயிலச் செய்யும் சித்தர். அவர் மெல்லிய சிறுவிரல் அசைவில் நிகழ்த்திய அற்புதம் வியக்கத் தக்கதாய் அமைந்திருந்தது.

பழந்தமிழ் இசையை மரபு கெடாமல் தற்காலம் வரை பாதுகாத்த பெருமை தமிழகத்து நாகசுரக் கலைஞர்கள்தான் என்பதில் அய்யமில்லை. இக்கலை வளர்ச்சிக்குத் திருக்கோயில்கள் மையமாக விளங்கியது. இறைவழிமாட்டில் கலைஞர் களின் பங்கு புனிதமானது. இறையுணர்வு மிக்கது. அவர்கள் இசையைத் தெய்வ மாகவே போற்றிப் பாதுகாத்தனர். கோயில் சார்ந்த குடிகளும், குடிகள், சார்ந்த கோயிலும் தமிழகத்துக் கலைகள் வளரக் காரணமாய் இருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் அதன் புனிதம் கெடவில்லை. வேற்று சமயத்தினர் வருகையால் நம்மரபில் மாறுபாடு தோன்றிவிட்டது. எனினும் இதுநாள் வரை இசைக்கலை, நடனக்கலை, பல வாத்தியக் கருவிகள் எல்லாம் கோயிலை மையமாகக் கொண்டு வளர்ந்து வந்தது குறிப்பிடத் தக்கது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் உச்சநிலை எட்டியது என்று கூறலாம். அந்தக் காலத்தில் மதுரைப் பொன்னுசாமிப்பிள்ளை, திருஆவடுதுறை நாகசுரசக்கரவர்த்தி ராஜரெத்தினம் பிள்ளை, திருவெண்காடு நாகசுர ராஜா சுப்பிரமணியம்பிள்ளை, திருவீழிமிழலை சகோதரர்கள், செம்பொன்னார் கோயில் சகோதரர்கள். இவர்களோடு தவில் வாசித்த நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, நாச்சியார் கோவில் ராகவன் பிள்ளை, கும்பகோணம் தங்கவேல் பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை, கூரைநாடு கோவிந்தராஜ பிள்ளை போன்றவர்கள் பணி பாராட்டத்தக்கது.

இசைத்துறையில் மரபைக் காத்துவந்தது போல் இல்லற வாழ்விலும் நெறிபிறழாத, ஒழுக்கம் நிறைந்த, அறநெறிபோற்றி வாழ்ந்த அவரது இல்லறத் தூய்மை பாராட்டத் தக்கது. அறிவு சான்ற கலை

உள்ளம் கொண்ட பிள்ளைகளும், மனைவியரும் பண்பாடு வந்த பெருமை மிக்க கலைக்குடும்பம் திருவெண்காட்டார் குடும்பம் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

நெடிய உருவம், சிவந்த திருமேனி, மெல்லிய சிறுவிரல்கள், அடர்ந்த சுருண்ட நீண்ட கரியமுடி கொண்ட அழகுக்குப் பெயர்தான் சுப்பிரமணியப்பிள்ளை. மோதிரம் இயங்கும் மெல் விரல்களின் அசைவில் அவர் கலையறிவு ஒளி வீசியது

மரகத மணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மெல் விரல்கள் பயிர் வண்டின் கிளைபோல் பல்துளையின் மிசைபடர இனிய நாதம் எழுந்து உயிர்கூட்டங்களை இன்புறுத்தி மகிழச் செய்த அவரது திறம் வியந்து அந்த அற்புதக் கலைஞரை என்றென்றும் நினைவுகொள்வோமாக.

வாழ்க அவரது புகழ்!



# இசையும் வாழ்க்கையும்

***டாக்டர் திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம்,***
*முதல்வர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை-600 028.*

உலகத்தில் உள்ள எந்த ஒரு பொருளும் மற்றொரு பொருளோடு தொடர்பு உடையது. நீர், நிலம், காற்று, ஆகாயம், தீ ஆகிய ஐம்பெரும் பூதங்கள் யாவும் அனுபவத்திற்கு ஏற்றாற்போல் உணரலாம். இவ்வாறே, மனுதனுடைய வாழ்க்கையும் இசையோடு இரண்டறக் கலந்துள்ளது. இதைத் தெள்ளிதின் உணர்த்தவே இக்கட்டுரை வரையப் பெறுகிறது.

இசை என்பதற்கு இசைய வைத்தல், மனத்தை வயப்படுத்தல் என்றெல்லாம் பொருள் உண்டு. மனிதனுடைய வாழ்க்கையில் இன்ப-துன்பங்கள், நன்மை-தீமைகள், பாவ-புண்ணியங்கள், அன்பு-கோபம் ஆகியன மாறி மாறி வருகின்றன. இவை யாவும் செயற்கையாய் மனிதனின் செய்வினைகளுக்கு ஏற்றவாறு வருகின்றன. இரவு-பகல், வெயில்-மழை போன்றவை இயற்கையாய் வந்து செல்வன. எனவே, மனிதன் தன் செய்வினையால் அனுபவிப்பது ஒன்று; இயற்கையாய் வருவனவற்றை எதிர் கொள்வது மற்றொன்று.

மனிதன் இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையவன். நீர், நிலம், காற்று, தீ ஆகியன இன்றி மனிதன் வாழ்தல் இயலாது. இவற்றுள் காற்று, மனிதனுடன் மிக மிக நெருங்கிய தொடர்புடையது. நாம் சுவாசிக்கக்கூடிய காற்றை நமக்கு ஒரே சீராக உடலுள் புகுத்தி, மீண்டும் சீராக வெளித்தள்ளும் வகையில் அமைந்தது மூக்கு. உடலின் எந்தப் பாகங்கள் செயல்பட்டாலும் செயல்படாவிட்டாலும் சுவாச உறுப்புகளும் காற்றும் இயங்கிக் கொண்டே இருப்பதை அறியலாம்.

இதயம், இரத்த ஓட்டத்தின்போது சுருங்கி விரியும் தன்மையுடையது. அவ்வாறு சுருங்கி விரியும்பொழுது 'லப்-டப்' என்ற ஒலி எழுவதுண்டு. இந்த ஒலியே நமக்கு 'லய'மாக அமைகிறது. மூக்கின் வழியே காற்றை உள்ளிழுத்தும் வெளிவிட்டும் இடைவிடாது நாம் சுவாசிக்கிறோம். இடைவிடாது சுவாசிக்கும் பொழுது ஏற்படும் காற்றின் அதிர்வே 'சுருதி'யாக அமைகிறது. ஆகவே, சுருதியும் லயமும் நம் உடலிலேயே வாழ்க்கைக்கு மூலாதாரமாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

'லயம்' என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட காலப் பரிமாணத்தோடு வரையறுக்கப் பட்ட ஓசை எனலாம். 'சுருதி' என்பது ஒழுங்குபடுத்தப்பட்டு, இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஒலியின் அளவு எனலாம். மனித மனம் ஒருநிலையில் இயங்காதது; அலை பாயும் தன்மையுடையது; இந்த அலைவுகளின் அதிர்வுகளால் ஆனதுதான் மனிதனுடைய செயல்கள். அதுபோல ஒலி அலைவுகளின் அதிர்வுகளால் பற்பல இராகங்கள் உண்டாகின்றன. இதனை, அனுபவத்தால் உணரலாம். எனவே, மனித மன அதிர்வுகளால் உடல் இயங்குவது போல, இசை ஒலி அதிர்வுகளால் பற்பல இராகங்கள் எழுகின்றன.

நம் உடலின் நாடித்துடிப்பும், இருதயத் துடிப்பும், சுவாசத் துடிப்பும் வெவ்வேறு

காலப் பரிமாணங்களைக் கொண்டது. சாதாரணமான ஒரு மனிதனுக்கு நாடித் துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 60 முதல் 72 வரை ஏற்படும். இதயத் துடிப்பும் ஏறத்தாழ இதே அளவு இருக்கும். ஆனால், சுவாசம் ஒரு நிமிடத்திற்கு ஏறக்குறைய 16 முதல் 19 வரை நடைபெறும். இதனை அறிவியல் மெய்ப்பிக்கும். எனவே நாடிக்கும், இதயத்திற்கும், சுவாசத்திற்கும் தொடர்பு உண்டு எனினும், பல்வேறு காலப் பரிமாணங்களைக் கொண்டு அவை இயங்குகின்றன என்பதை அறியலாம்.

ஒருவன் ஓடிவந்து நின்றபின் அவனுக்கு மூச்சு இரைப்பதைக் காண்கிறோம். அப்போது, அவனுடைய இதயத் துடிப்பும், நாடித் துடிப்பும், சுவாச நிலையும் வேகத்தில் அதிகரிக்கின்றன. சிறிது நேரம் கழித்து எல்லாத் துடிப்பும் சமநிலையை அடைந்துவிடுகின்றன. இதேபோல் வரம்பு மீறிய கோபம் வந்துற்ற போதும், உணர்ச்சி வந்துற்றபோதும் இரத்த ஓட்டம் வேகமாய்ப் பாய்கின்றது. அதனால், நாடித் துடிப்பும் வேகமாய் நடக்கின்றது; சுவாசமும் கூடுதலாய்த் தொடர்கின்றது. இதனால் இதய ஒலி கூடுகிறது. இவ்வாறே இசையில் ஒரு களை, இரண்டு களை, நான்கு களை ஆகியன வேகத்திற்குத் தகுந்தாற் போல அமைகின்றன. எனவே, இதயத்தின் ஒலியாகிய லயமும், மூச்சு சுவாசித்தலின் இடையறாத நிகழ்ச்சியாகிய சுருதியும் நம் உடலோடு, வாழ்வோடு ஒன்றி இருப்பதைத் தெளிவாக அறியலாம்.

காலப் பரிமாணத்தின் வேறுபாட்டின் காரணமாகத்தான் மனிதனுக்கு வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவை வருகின்றன. இதனைச் சித்தர்கள் நன்கு உணர்ந்து அவற்றுக்கு இயற்கைப் பொருளையே மருந்தாகவும் கொண்டு சமப்படுத்தினர். திருவள்ளுவர்,

*"நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"*

என்று கூறுவார். அதைப்போல் காலப் பரிமாணம் சரியில்லை என்றால் இசை, இசையாக இராது; இரைச்சலாகத்தான் இருக்கும். இதனை உணர்ந்தே ஒவ்வொரு பாடலுக்கும் இராகத்துடன் தாளத்தை அமைத்தனர்.

ஒரு குறிப்பிட்ட பாடலைக் குறிப்பிட்ட இராகத்தில் பாடும்போது குறிப்பிட்ட தாளத்துடன் பாடுதல் மரபு. அந்த மரபு இன்னும் மாறவில்லை; இனியும் மாறாது. மாறினால் அன்றே மனிதன் மனிதத் தன்மையிலிருந்து மாறிவிட்டான் என்று அறுதியிட்டுக் கூறிவிடலாம்.

மனிதனுடைய மனம் எப்பொழுதும் சீரான அமைதியோடு இருப்பதில்லை; எப்பொழுதும் அலைபாய்ந்து கொண்டே இருக்கும்; எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கும்; சும்மா இருக்காது.

*"சும்மா இரு சொல்லற என்றலுமே*
*அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"*

என்று பாடிய அருணகிரிநாதரும் 'சும்மா' என்ற சொல்லுக்குப் பொருளைத் தேடி அலைந்துள்ளார். இப்படி அலைந்து கொண்டிருக்கும் மனத்தை அமைதிப் படுத்த வேண்டி, ஆன்மிகவாதிகள் 'தியானம்' என்றும், யோகம் செய்பவர்கள் 'மன ஒருமைப்பாடு' என்றும், கொள்கையாளர்கள் 'வைராக்கியம்' என்றும், இசைவாணர்கள் 'காலப் பிரமாணம்' என்றும், முனிவர்கள் 'மனக்கட்டுப்பாடு' என்றும், காந்திய வாதிகள் 'அகிம்சை' என்றும், மிதவாதிகள் 'சாந்தி' என்றும் பல்வேறு பெயர்களில் முனைகின்றனர். இவற்றுள், குறிப்பாக இசைவாணர்கள் காலப் பிரமாணத்தில் (லயத்தால்) மனத்தை அமைதிப்படுத்து

கின்றனர்.

காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் இரவிலும் நமது உடலின் இரத்த ஓட்டம் ஒரே சீராக இயக்குவதில்லை; ஒவ்வொரு நாழிகைக்கும் மாறிக் கொண்டே இருக்கக் கூடியது என்று சித்த மருத்துவர்கள கூறுவர். இப்படி ஒவ்வொரு நாழிகைக்கும் நடைபெறும் இரத்த ஓட்டத்திற்கு ஏற்றதைப் போல தனித் தன்மையுடைய ஒவ்வொரு இராகங்களை உரியதாக்கிக் கொண்டு அவற்றைப் பாடுகின்றோம். அவை வருமாறு:

| | |
|---|---|
| விடியற்காலை | – பூபாளம், பௌளி, மலய்மாருதம். |
| காலை | – பிலஹரி, அம்சத்வனி, கேதாரம். |
| முற்பகல் | – தன்யாசி, அசாவேரி. |
| நண்பகல் | – மத்யமாவதி, ஸ்ரீராகம். |
| பிற்பகல் | – பேகடை, தர்பார் |
| மாலை | – கல்யாணி, வசந்தா, சண்முகப்ரியா |
| இரவு | – நீலாம்பரி, ஆனந்தபைரவி |

எந்த நேரமும் பாடும் இராகங்கள் – சங்கராபரணம், காம்போதி, ஆரபி, பைரவி, கரகரப்பிரியா.

இவ்வாறு பாடுவதனால் பாடலின் ஒலி அலைகள் நம் உடலுக்குள் சென்று இரத்த ஓட்டத்தைச் சரி செய்து, மனத்தை அமைதிப்படுத்த வழிவகை செய்கிறது எனலாம்.

இவற்றைப்போல் இன்னும் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியோடும் இசையை இணைத்துக் கூறலாம். நாம் பிறப்பதிலிருந்து இறக்கும் வரை இசையோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளோம் என்பது வெள்ளிடைமலை. இசையின் இயல்புகளையும் வேறுபாடுகளையும் குறிப்பாகவும் சிறப்பாகவும் எல்லாராலும் அறியமுடியா விட்டாலும், பொதுவாக இசையை விரும்பாதார் எவரும் இலர் என்றே மொழியலாம். இசையாதாரையும் இசையவைக்கும் அத்தகு இசையை நாம் வாழ்த்துவோம்; நாமும் இசைபட வாழ்வோம்.